1987 மார்ச் 26]

குமரி மாவட்டம் எல்லைப் பகுதிகளுக்கு தாமிரபரணி ஆற்றிலிருந்து கூட்டு குடிநீர் திட்டம்.

183—(*வினா எண் 7602) திரு. ஜே. ஹேமச்சந்திரன்): மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் எல்லைப் பகுதியான களியாக்காவிளை, கோழிவிளை, கூட்டப்புளி, பொன்னப்ப நகர், குழிவிளை, செம்மாம்விளை ஆகிய பகுதிகளுக்கு குழித்துறை தாமிரபரணி ஆற்றில் மங்காடு கடவிலிருந்து ஒரு கூட்டுக் குடிநீர் அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 10-30)

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் உள்ள, இந்தக் கேள்வியில் குறிப்பிடப்பட்டிருக்கிற பகுதிகள் எல்லாம் மிகவும் தண்ணீர் பற்றாக்குறையாக உள்ள பகுதிகளாக இருந்து வருவதால், மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே இந்த நிலைமையைக் கணக்கில் எடுத்து, உடனடியாக இந்தத் திட்டத்தை அமல்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மிகப் பெரிய வறட்சி நிலவி வருவதை நாடு நன்கு அறியும். ஆகவே அந்தப் பகுதியிலே எங்கெங்கு திறந்தவெளிக் கிணறுகளில் தண்ணீர் கிடைக்கிறதோ, மற்ற முறைகளில் தண்ணீர் கிடைக்கிறதோ அங்கெல்லாம் குடிநீர் திட்ட வேலைகள் நடைபெற்று, அங்குள்ள மக்களுக்கு தண்ணீர் கிடைப்பதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்துகொண்டு வருகிறார்கள்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்த திட்டத்தைப்பற்றி ஏதாவது ஆய்வு செய்யப்பட்டதா? ஆய்வு செய்யப்பட்டது சம்பந்தமாக ஏதாவது அறிவிப்பு அரசுக்கு வந்திருக்கிறதா, அல்லது ஆய்வு செய்வதற்கு உள்ள நடவடிக்கை ஏதாவது இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, களியாக்காவிளை பேரூராட்சி குடிநீர்த் திட்ட வேலைகள் மற்றும் குழித்துறை ஆற்றின் நீரை ஆதாரமாக வைத்து ஆய்வு வேலைகள் தொடங்கப்பட்டு ஆய்வுப் பணிகள் முன்னேற்றத்திலே இருக்கின்றன.

திரு. வை. பாலச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வியிலே குறிப்பிடப்பட்டுள்ள இடங்களிலும், பத்மநாபபுரம் நகராட்சிப் பகுதியிலும், நிலத்தடி நீர் குறைந்து வருவதாக குறிப்பிடப்பட்டு இருப்பதால், நிலத்தடி நீரை மட்டுமே பயன்படுத்தி, குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க முடியாது என்ற நிலை இருப்பதால், ஆறுகளில் ஓடுகிற தண்ணீரையும், பிற குளங்களில் தேங்கியிருக்கிற நீரையும் பாதுகாக்கப்பட்ட குடிநீராகப் பயன்படுத்த முடியும் என்ற காரணத்தால், அந்தப் பகுதிகளுக்கு நிரந்தரமாக ஒரு குடிநீர் திட்டத்தை வழங்குவதற்கு ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அளிக்க அரசு முன்வருமா என்பதையும், பத்மநாபபுரம் நகராட்சியின் சார்பில் பரிந்துரை செய்யப்பட்டுள்ள 2 கோடி ரூபாய்த் திட்டத்தை அரசு அங்கீகரித்து அனுப்புமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, இந்தப் பகுதியில் தற்போதுள்ள வறட்சி நிலையைச் சமாளிப்பதற்கான தன்மையிலே எல்லா ஊர்களிலும் இருக்கிற திறந்தவெளி கிணறுகளைப் பயன்படுத்தியும், கையிறைப்பான்களைப் போட்டும் அந்தப் பகுதி மக்களுக்கு தண்ணீர் கொடுக்கப்பட்டு வருகிறது. நிரந்தரப் பரிகாரம் காண்பதற்கு விரைவிலே திட்டங்கள் தீட்டப்பட்டால்தான் அதற்கான முடிவுகளை எடுக்க முடியும். தற்போது வறட்சி நிலையைச் சமாளிக்கிற ஏற்பாட்டிலே மட்டும் குடிநீர் வடிகால் வாரியம் ஈடுபட்டு வருகிறது.

1987 மார்ச் 26]

திரு. மா. சுந்தரதாஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியில் கேட்டிருக்கிற பகுதிகள் எல்லாம் என்னுடைய தொகுதியைச் சேர்ந்த பகுதிகளாகும். இந்தப் பகுதிகளில் தண்ணீரே இல்லை என்று சொல்லுகிறார்கள் நிபுணர்கள். இந்தப் பகுதிகளில் குழாய்கள் எதுவும் போடப்படவில்லை. கலெக்டரை கேட்டால், ஆய்வில் இருக்கிறது என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து அந்தப் பகுதிகளை ஆய்வுக்கு எடுத்து உடனடியாக கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உருவாக்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, அந்த பகுதியிலே கூட்டப்புளியில் ஒரு திறந்தவெளி கிணறு இருக்கிறது. பொன்னப்ப நகரில் கையிறைப்பானும், திறந்தவெளிக் கிணறும் இருக்கிறது. குழிவிளையில் ஒரு கையிறைப்பானும், திறந்த வெளிக் கிணறும் இருக்கிறது. செம்மாங்விளையில் ஒரு திறந்தவெளிக் கிணறு செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது. நான் ஏற்கெனவே சொன்ன, களியாக்காவிளை குடிநீர்த் திட்ட ஆய்வு வேலைகள் முன்னேற்றத்திலே இருக்கின்றன. ஆகவே தற்போது நிலைமைகளைச் சமாளிக்கின்ற தன்மையிலே குடிநீர் வடிகால் வாரியம் செயல்பட்டு வருகிறது.

திரு. கோ. பெருமாள் பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்திலே நிலத்தடி நீர் குறைந்து வருவதோடு கிடைக்கின்ற நிலத்தடி நீரும் உப்புத் தண்ணீராக இருக்கிற காரணத்தால், திருநெல்வேலியில் உள்ள தாமிரபரணி ஆற்றிலிருந்து கன்னியாகுமரி நகரத்திற்கு தண்ணீர் வழங்குவதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட திட்டம் தற்போது எதுவும் இல்லை.